**பதிவஞ்சல்**

**கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், சேலம் அவர்களின் செயல்முறை ஆணை**

முன்னிலை: திருமதி. சு. நிர்மலா, பி.காம்., எச்.டி.சி.எம்.,
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
சேலம் சரகம், சேலம்.

ந.க.5328/ 2023 / அபஅ — நாள்: 14.11.2023

ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசி, திருவள்ளுவராண்டு 2054

பொருள்: பணியாளர் தொகுதி – நேரடி நியமனம் – இளநிலை உதவியாளர் தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் குழுவின் CCSE IV (Group IV) (2019–2020 முதல் 2022–2023 வரை) தெரிவு செய்த இளநிலை உதவியாளர்கள் கூட்டுறவு தணிக்கை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்கள் – கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், சேலம் சரகக் கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது – இளநிலை உதவியாளர் / தற்செயல் விடுப்பு பிரிவு பணியிடத்தில் பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது – தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.1934/PSD– B1/2023, நாள். 10.08.2023.
2. கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.12354 / 2023 /அபஅ. 2 (1), நாள்: 08.11.2023.

-------------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் Combined Civil Services Examination IV (தொகுதி IV) 2019–2020 முதல் 2022–2023 வரை உள்ள ஆண்டுகளுக்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு நேரடி நியமனம் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு, கூட்டுறவு தணிக்கை துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை (2)–ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையின்படி இளநிலை உதவியாளராக தற்காலிகமாக நியமனம் செய்து, இவ்வலுவலக கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.லெ.ராஜேந்திரன் இவ்வலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர்/தற்செயல்விடுப்பு பிரிவு பணியிடத்தில் பணியமர்த்தப்படுகிறார். இவர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் Combined Civil Service Examination தொகுதி IV மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளதால், இளநிலை உதவியாளர் பணிக்குண்டான ஊதிய விதிகள் 2017–ன் ரூ.19,500–62,000 (நிலை–08) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத் தகுதியுடையவராவர்.

த.பி.பா.

இவரது பணி நியமனம் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டது ஆகும்.

1. இளநிலை உதவியாளர் பதவியில் சேர்ந்த நாள்முதல் தொடர்ச்சியாக மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டு பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்தை முடிக்கவும், தகுதி காண் பருவகாலத்தில் சம்மந்தப்பட்ட இளநிலை உதவியாளர் பணியில் அல்லது நடத்தையில் அதிருப்தி ஏற்பட்டால், எந்த நேரத்திலும் பதவியிலிருந்து நீக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

2. இந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV (தொகுதி IV) (அறிவிப்பு எண்.07/2022, நாள்.30.03.2022) குறித்து சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றங்களில் நிலுவையுள்ள வழக்குகளின் நீதிப்பேராணை விண்ணப்பங்கள் மற்றும் இதர தெரிவு தொடர்பான நிலுவை உள்ள வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

3. தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தனியர் அளித்துள்ள விவரங்கள் தவறானவையென பின்னர் தெரியவந்தால், இவரது தெரிவு மற்றும் தற்காலிக பணி நியமனம் உடனடியாக இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

4. பணியிட நியமனம் வழங்கி இவ்வலுவலகத்தில் நியமன ஆணை பிறப்பிக்கப்பட்ட 15 நாட்களுள் பணியில் சேர வேண்டும் எனவும், தமிழ்நாடு அரசின் பிற துறைகளில் பணிபுரிபவரானால், அத்துறையிலிருந்து பணி விடுவிக்கப்பட்டு பணிசேர்காலம் ஏதும் துய்க்காமல் உடன் பணியமர்த்தப்பட்டுள்ள பணியிடத்தில் பணியில் சேர வேண்டுமெனவும், பணிசேர் காலம் குறித்து எவ்வித மனுவும் ஏற்கப்படமாட்டாது எனவும் குறிப்பிட்ட காலவரையறைக்குள் பணியில் சேராவிடின் இவரது பெயர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 7 (5)–ன்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பட்டியலிலிருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

5. தகுதி காண் பருவ காலத்தில் நிறைவு செய்ய வேண்டிய பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

6. பள்ளி இறுதி தேர்வில் தமிழை ஒரு பாடமாக படித்துள்ளதை உறுதி செய்து கொள்ள ஏதுவாக அனைத்து கல்விச் சான்றிதழ்களையும் பணியில் சேரும்போது சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்.

7. பார்வை (1)–ல் காணும் தேர்வாணைய கடிதத்துடன் பெறப்பட்டுள்ள பட்டியலில் தனியரின் மதிப்பெண் அடிப்படையிலேயே முன்னுரிமை வரிசை எண் பெறப்பட்டுள்ளது.

8. அனைத்து கல்விச் சான்றிதழ்களும், தொழில்நுட்பச் சான்றிதழ்களும் மெய்த்தன்மை ஆய்வுக்கு உட்படுத்த ஏதுவாக அலுவலகத்தில் இருநகல்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

த.பி.பா.

9. இவர் உடற்தகுதிச் சான்றினை தகுந்த அரசு மருத்துவரிடமிருந்து பெற்று பணியில் சேரும்போது சமர்ப்பிக்குமாறும், மாற்றுத் திறனாளியாக இருக்கும் பட்சத்தில், மாவட்ட மருத்துவக்குழுவிடமிருந்து தகுந்த சான்றினைப் பெற்று சமர்ப்பிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவர் வேலை வாய்ப்பக பதிவு அட்டையை பணியில் சேர்ந்த உடன் தவறாது இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

11. இவர் இளநிலை உதவியாளர்/தற்செயல்விடுப்பு பிரிவு பணியிட பொறுப்புகளை திரு.தி.ஜெயக்குமார், முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர், அபஅ பிரிவு வசம் பெற்றுக் கொண்டு, பொறுப்பு பட்டியலின் நகல் ஒன்றினை அலுவலகத்தில் சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்படுகிறார்.

இவர் இவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியிடத்தில் உடனடியாக சேர வேண்டும். இவர் உரிய காலத்திற்குள் பணியில் சேர தவறினால் இவருக்கு ஏற்பளிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்குவதற்குண்டான பிரேரணையை கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இந்த செயல்முறை ஆணையை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

14.11.2023

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
சேலம் சரகம்.

14.11.23

பெறுநர் :

1. திரு.எல்.ராஜேந்திரன்,
த/பெ. ம.லெட்சுமணன்,
முத்தம்பட்டி, பாளையம் (அஞ்சல்),
வேடசந்தூர் (தாலுக்கா),
திண்டுக்கல் – 624 620.

2. திரு.தி.ஜெயக்குமார்,
முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர்

[இவர் இளநிலை உதவியாளர் பணியிட பொறுப்புகளை ஒப்படைத்து, பொறுப்பு பட்டியலின் நகலினை உடன் அலுவலகத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்].

**நகல் :**

1) கூட்டுறவு தணிக்கை இயக்குநர், சென்னை–35 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2) செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–03 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3) கூட்டுறவு தணிக்கை இணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்–16 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4) அலுவலக அனைத்துப் பிரிவுகள்.
5) இருப்புக்கோப்பு–அபஅ பிரிவு.
6) பணிப்பதிவேட்டிற்கு.